செ.வெ.எண்:41 நாள்:21.10.2021

# அக்டோபர் 21 தேசிய அயோடின் பற்றாக்குறை குறைபாடுகள் தடுப்பு தினத்தையொட்டி, அயோடின் சத்து மற்றும் அயோடின் உப்பு பயன்பாடு குறித்து விழிப்புணர்வு உறுதிமொழியை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் அலுவலர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் எடுத்துக் கொண்டனர்.

கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், ஆலப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாமில் அக்டோபர் 21 தேசிய அயோடின் பற்றாக்குறை குறைபாடுகள் தடுப்பு தினத்தையொட்டி, அயோடின் சத்து மற்றும் அயோடின் உப்பு பயன்பாடு குறித்து விழிப்புணர்வு உறுதிமொழியை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் உறுதிமொழி வாசிக்க அலுவலர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். முன்னதாக மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் கொரோனா தடுப்பூசி முகாமை துவக்கி வைத்து பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஒய்.பிரகாஷ் (ஓசூர்), திரு.டி.மதியழகன் (பர்கூர்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**தேசிய அயோடின் பற்றாக்குறை குறைபாடுகள் தடுப்பு தின உறுதிமொழி:**

அயோடின் சத்து மனித உடலுக்கு மிகவும் அத்தியாவசியம் ஆகும். அயோடின் சத்து பற்றாக்குறையால் சிசு மரணம் மூளை வளர்ச்சி இல்லாமை அறிவுத் திறன் குறைபாடு மற்றும் முன் கழுத்து கழலை நோய் போன்ற குறைபாடுகள் ஏற்படும் என்பதை நான் நன்கு அறிவேன்.

அயோடின் சத்தை பெற அயோடின் கலந்த உப்பினை தினமும் உணவில் பயன்படுத்துவதே சிறந்த வழி என்பதை நான் அறிவேன்.

எனவே, நானும் எனது குடும்ப உறுப்பினர்களும் அயோடின் கலந்த உப்பினை மட்டுமே பயன்படுத்துவோம். அயோடின் பற்றாக்குறை குறைபாடுகள் இல்லாத தமிழகத்தை உருவாக்கும் முயற்சியில் நானும் எனது குடும்ப உறுப்பினர்களும் துணை நிற்போம் என்ற உறுதிமொழியை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் அலுவலர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.வெற்றிசெல்வன், திரு.சுகவனம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.செங்குட்டுவன், திரு.முருகன், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் திரு.சதீஸ்குமார், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வி.கோவிந்தன், வட்டார மருத்துவ அலுவலர் மரு.ஜோதிபாசு, மரு.சுசித்ரா, மரு.ராஜேஸ்வரி, வட்டாட்சியர் திரு.சரவணன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**